ப.காந்தி
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் - 636 011
treatgandhi@gmail.com
9843299241

# மானிடவியல் நோக்கில் சங்க இலக்கிய முல்லைத் திணையுள் உணவு பண்பாட்டு விழுமியங்கள்

பண்பாடு என்பது பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒருசொல். ஆங்கிலத்தில் Culture(கல்ச்சர்) என்னும் சொல்லுக்கு இணையான பொருளில் இச்சொல் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. கலாச்சாரம் என்ற சொல்லும் பண்பாட்டுக்கு ஒத்த சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. இது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும், அத்தகைய செயற்பாடுகளுக்குரிய சிறப்புத் தன்மைகளையும் முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறீயிட்டு அமைப்புக்களையும் குறிக்கின்றது. பண்பாடானது இசை, இலக்கியம், சமூகம், சமயம், வாழ்க்கைமுறை, உணவு, ஓவியம், சிற்பம், நாடகம், தொழில்கள் போன்ற எண்ணற்ற நுகர்பொருட்கள் கூறுகளை மட்டும் அடையாளம் காண்கிறது என்கின்றனர் அறிஞர்கள். ஆனால் மானிடவியலாளர்கள் பண்பாடு என்பது நுகர்பொருட்களை மட்டுமல்லாது அவற்றை உருவாக்குவனவும், அவற்றிற்குப் பொருள் மற்றும் கொடுப்பதுமான வழிமுறைகளையும் அப்பொருள் மற்றும் வழிமுறைகளில் பொதிந்துள்ள சமூகத்தொடர்புகள், செயல்முறைகள் என்பவற்றையும் குறிப்பதாகக் கூறுகின்றனர். அவர்களைப் பொருத்தவரை பண்பாடு என்பது கலை, அறிவியல், நெறிமுறைகள் போன்ற மக்களின் வாழ்வியலை ஒட்டுமொத்தமாகக் கொண்டிருப்பதாகும்.

சமூகம், சமயம், உணவு, பொருளாதாரம் போன்ற அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கிய பண்பாட்டு மானுட ஆய்வுக்களத்தில் பண்பாட்டின் மிகச்சிறிய அலகாக உணவு பண்பாட்டுக் கூறு கருதப்படுகிறது. பண்பாட்டுக் கூறுபற்றி “கற்றுணர்ந்த நடத்தை முறையானாலும் சரி, உற்பத்தி செய்யப்பட்ட பயன்படு பொருளானாலும் சரி, அதனை எந்த அளவுக்குக் குறைத்துக் காணமுடியுமோ அந்த அளவிற்குக் குறைத்துக் காணக் கூடிய ஒன்றே பண்பாட்டுக்கூறு ஆகும்” என்பார் யோபல் (Adamson E.Hoebal, Man in Primltive World, p.499) அவ்வகையில் உணவு பண்பாட்டினை அவற்றின் தொழில்நுட்ப பண்புகளின் அடிப்படையில் பார்க்கும் போது உணவு சேகரித்தல், உணவு உற்பத்தி ஆகிய இரு நிலைகளில் வகைப்படுத்தலாம்.

“ஒரு பண்பாட்டின் படிமலர்ச்சியின் தன்மையை மதிப்பிட வேண்டுமானால் அது உலகளாவிய பண்பாட்டின் படிமலர்ச்சியின் பொதுநிலையில் எவ்விடத்தில் உள்ளது என்ற மதிப்பீட்டையும் (பொதுநிலைப் படிமலர்ச்சி), அடுத்து அப்பண்பாடு அதனுடைய சுற்றுச்சூழலுக்கேற்ப வளர்த்தெடுத்தக் கொண்ட தனித்துவமான படிமலர்ச்சி நிலையின்

மதிப்பீட்டையும் (தனிநிலைப் படிமலர்ச்சி) ஒருங்கிணைத்து அப்பண்பாட்டின் படிமலர்ச்சியை அறுதியிட வேண்டும்.''(பக்தவதசல பாரதி,மானிடவியல் கோட்பாடுகள்,ப.45) அவ்வகையில் உலகந்தழுவிய ஆதி முறையாக கருதப்பட்ட வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனக்குழு வாழ்வு பொதுநிலைப் படிமலர்ச்சியில் ஒற்றுமை இருப்பினும் வேட்டையாடும் முறை, கருவிகள் என்னும் தனிநிலையில் அவை மாறுபடுகின்றன.

''பகிர்ந்துண்ணும் வழக்கம் கொண்ட வேடர் குறவர் முதலான குழு மக்கள் வேலிகளால் சூழப்பட்ட சீறூர்களில், குடிசைகளில் வாழ்ந்தார்கள். குறிப்பாக வில், அம்பு, வேல் முதலான வேட்டைக் கருவிகளைக் கொண்டு வேட்டையாடல். ஆநிரைக் கவர்தல், ஆறலைத்தல் முதலிய உணவு சேகரிக்கும் முறைகளைக் கையாண்ட வேடர்கள் ஏனைய குறவர், ஆயர் போல வரகு, தினை, ஐவன விவசாயத்திற்கு மாறியதாகத் தெரியவில்லை.''(ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப.114) என்னும் ராஜ் கௌதமனின் கூற்றுப்படி முல்லை நில சமூகத்தைச் சார்ந்த மக்கள் உணவு சார்ந்த நிலையில் இருவகையான அதாவது வேடர்கள் உணவு சேகரிப்பிலும் ஆயர் முதலான மக்கள் உணவு உற்பத்தியிலும் ஈடுபட்டியிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

''முல்லைப் பகுதியில் கால்நடை வளர்ப்பும் புன்செய் வேளாண்மையும் தொழிலாக இருந்தன. பால், மோர், தயிர், நெய், திணை, வரகு, கொள், அவரை, கால்நடை இறைச்சி, வேட்டைப் பொருட்கள் முதலியன இப்பகுதி மக்களின் உணவுப் பொருட்களாக இருந்தன''.(கணியன் பாலன்,பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், ப.246) இத்தகைய பண்பாட்டு விழுமியங்களின் துணையோடு சங்க இலக்கிய முல்லை நிலச்சமூகத்தின் பண்பாட்டில் ஒன்றான உணவு முறைகளை மானிடவியல் நோக்கில் ஆய்வது இன்றியமையாகிறது.

**முல்லைத்திணையுள் உணவு சேகரித்தல்**

வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனக்குழு வாழ்வில் சேகரித்தல் (Gathering) மிக முக்கியமானதாகும். ''வேட்டையாடுதல், மீன்பிடித்தல், காட்டில்கிடைக்கும் காய்கனிகள், கொட்டை வகைகள், தேன், பிற உண்ணும் பொருள்களைச் சேகரித்தல், மரப்பட்டைகள்,நார், மரப்பொருட்கள் போன்றவற்றைச் சேகரித்துமற்ற மக்களுக்கு கொடுத்து அவர்களிடமிருந்து தேவையான பொருட்களைப்பெறுதல் ஆகியவை மூலம் உணவுத் தேவைகளை ஈட்டும் முறையை வேட்டையாடி உணவு சேகரித்தல் முறையாகும்.'' (பக்தவதசல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.464) பெரும்பாலும் இதனைப் பெண்களே செய்தனர். எனினும் கிழங்ககழ்தல், தேனிழைத்தல் ஆகியவற்றில் ஆண்களுங்கூட பங்கேற்றனர் என்பதைப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

முன்றில் சிறுநிறை நீர்கண்டு உண்ணும்
புன்புலம் தழீஇய பொறைமுதல் சிறுகுடித்

திணைகள் உண்ட தெறிகோல் மறவர்

சிசைத்த வில்லர் வேட்டம் போகி

முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும் (அகம்.284,6-10)

முல்லை நிலஞ்சூழ்ந்த குன்றின் அடிவாரத்தில் உள்ள சிற்றூரில், தெறித்து எய்யும் அம்பினையும் அழுத்து கட்டிய நாணயுடைய வில்லையும் உடைய மறவர்கள் திணைக்கொண்டு சமைத்த கள்ளினை உண்டு, வேட்டைமேற் சென்று முல்லை நிலத்தோட்டத்தில் மானை அறுத்துத் தின்பர்.

உடும்பு கொலீய வரிநுணல் அகழ்ந்து

நெடுங் கோட்ப் புற்றத்து ஈயல் கெண்டி

எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல (நற்.59,1-3)

என்னும் நற்றினை பாடலில் உடும்பினைக் கொன்றும், வரித்த தவளையினை அகழ்ந்து எடுத்தும் புற்றுகளில் உறைந்துள்ள ஈசல்களை தோண்டி எடுத்தும் பகலில் முயல்களை வேட்டையாடியும் வாழும் வேடவன். இவ்வாறே பகற்பொழுதிலே திறந்த வாயையுடைய வேட்டை நாயுடன் கானகம் சென்றுவேலிகளில் வலையை மாட்டி வைத்துப் பசிய புதர்களிலிருந்து முயல்களை வெளிப்படச் செய்து அகப்படுத்துவர். ஆதன் இறைச்சியை விரும்பியுண்டனர் (பெரும்பாண்.111-116). “வேட்டையாடி உணவு சேகரித்த இவர்கள் வேடர் குடியினர் என்று பொதுவாக அழைத்தனர். வில், அம்பு, கவண், வலை,கண்ணி முதலிய கருவிகளுடன் வேட்டை நாயின் உதவியுடன் காடுகளிலும் மலைகளிலும் யாருக்கும் பாதிப்பில்லாமல் வேட்டையாடினர். காடுபடு பொருட்களைச் சேகரித்து உண்டனர். இவர்களுடைய ஆயதங்களில் வில் முதன்மையான இடம்பெற்றிருந்ததால் இவர்களைப் புலவர்கள் வில்லோர் உழவர் என்று குறிப்பிட்டனர்.” (பக்தவதசல பாரதி, இலக்கிய மானிடவியல், ப.56). இத்தகைய வேட்டையாடி உணவு சேகரித்த நிலையிலிருந்து வேட்டையாடி உணவு உற்பத்தி செய்த பண்பாட்டு படிநிலையினையும் இணைத்து ஆராய வேண்டியதாகிறது.





வேட்டையாடி உணவு உற்பத்தி செய்த இத்தகைய நிலையினர் எளிய வேளாண்மை செய்ய முற்பட்டனர்.ஆயினும், வேட்டைத் தொழிலைக் கைவடைவில்லை. அவர்கள் இட்ட பயிர்களைக் காக்கவே காட்டு விலங்ககளை வேட்டையாடினர். வேட்டை என்னும் நிலையிலிருந்து மாறி வேளாண்மையைக் காப்பதற்கான வேட்டையாக மாறிய சமூக சூழலைக் காணமுடிகிறது.

சிறுதலைத் துருவின் பழுப்புஉறு விளைதயிர்

இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியோடு

குர்வாய்த்து ஒழிந்த ஈர்வாய்ப் புற்றத்து

ஈயல் பெய்துஅட்ட இன்புளி வெஞ்சோறு

சேதான் வெண்ணெய் வெம்புறுத்து உருக (அகம்.394,2-6)

சிறிய தலையினையுடைய செம்மறியாட்டினது பழுப்பு நிறம் வாய்ந்த முற்றிய தயிரை உலை நீராக்கிப் புதுக் கொல்லயில் விளைந்த நன்கு குற்றிய வரகினது அரிசியை அதிற்போட்டு, மழை மிகுதியாக பெய்தமையால் புற்றிலிருந்து வெளிவந்து அழிந்த ஈயலையும் அதில் இட்டுச் சமைத்த இனிய புளிப்பையுடைய சோற்றில் கிடந்து உருகுமாறு பசுவின் வெண்ணெய்யை ஊற்றி நின் எவலர் உண்ட நிகழ்வை அறியமுடிகிறது. இவ்வாறே ஈயலை நன்கு புளித்த மோரில் ஊறப்போட்டுப் புளிங்கறி சமைத்து உண்டனர் (புறம்.119). இங்குப் புதுக்கொல்லை என்பது ஆரம்பகட்ட எளிய வேளாண்மையைக் குறிக்கிறது.

தினையைக் கவர்ந்துண்டு அகப்பட்ட கானக்கோழியை நெருப்பிலிட்டுச் சுட்ட இறைச்சியுடன் சுட்ட ஆரல் மீனையும் பாணர் உண்டமை (புறம்.320). வேட்டை சிறுவர் கொணர்ந்த உடும்பின் தசை பெய்தது சமைக்கப்பெற்ற தயிரோடு கூடிய கூழினைப் பாணருக்கு உண்ண கொடுத்தல் (புறம்.326). சிறுதினையை உண்ணவரும் புறா, இதல் முதலான பறவைகளைப் பிடித்துச் சமைத்தற்க இயலாதபடி பொழுது மறைந்து விட்டதால் பாணர்களுக்கு சுட்ட முயல்கறி தருதல் (புறம்.319). பறவைகளின் ஊனைத் தின்று புலால் நாற்றம் நாறுகின்ற மெல்லிய வாயினையும் வெள்ளிய பற்களையும் உடைய வேட்டுவர்களின் விருப்பத்திற்கு உரிய துணையாகிய சிறுவர்கள்(புறம்.324).

**முல்லைத்திணையுள் உணவு உற்பத்தி**

புறவு, வன்புலம், முல்லைநிலம் என்ற சொற்களால் குறிக்கப்பட்ட வானம் பார்த்த பூமி பரப்பில் கால்நடைகளை மேய்த்துப் பாதுகாத்து அவற்றிலிருந்து பெறப்பட்ட பால் பொருட்களை உண்டும் பண்டமாற்றுச் செய்தும் வாழ்ந்த குடியினர் கோவலர், ஆயர், அண்டர், இடையர் என்ற சொற்களால் குறிக்கப்பட்டார்கள். “கால்நடை சார்ந்ததெரு வாழ்க்கை ஒருபுறம் இருக்க, வன்புலங்களில், செம்மண்நிலங்களில், கொல்லை நிலங்களில் மழையை நம்பியே வரகு, அவரை, எள், கொள், பயறு வவசாயத்தை மேள்கொண்ட மற்றொர வாழ்க்கையும்

இயங்கிக்கொண்டிருந்தது. கானக் குறவா் குடியின் மலைச்சாரல்களில் எரித்து உண்டாக்கி விளைவித்து விட்டுப் பின்னா் அதனை விடுத்து வேறு புதிய புனங்களை எரித்து உண்டாக்கித் தினை, ஐவன விவசாயம் செய்தது போல முல்லை நிலத்தைச் சோ்ந்த உழவா்கள் இடப்பெயா்ச்சி விவசாய முறையைப் பின்பற்றவில்லை.” (ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், ப.142).

பேருரை தலைஇய பெரும்புலன் வைகறை

ஏா்இடம் படுத்த இருமறுப் பூழிப்

புறமாற பெற்ற பூவல் ஈரத்த

ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடங்சால்

வித்திய மருங்கின் விதைபல நாறி (அகம்.194)

ஏன்னும் அகநானூற்று பாடல் ஒரு நாள் இரவில் பெருமழை பெய்தது. நன்றாகப் புலா்ந்த காலைப் பொழுதில் எல்லோரும் தம் தம் நிலங்களில் ஏா் பூட்டி உழுதனா். அந்தச் செம்மண் நிலத்துப் புழுதி கீழ்மேலாக மாறிடுமாறு உழுதனா். ஏா் உழுத பின், பிளந்த செல்லப்பட்ட செம்மண், செந்நிறமான ஊனைக் கிழித்துச் சென்றது போல் தோன்றியது. அங்கு வரகு விதைக்கப்பட்டது. பல விதைகள் முளைத்த எழுந்தன. கோம்புடைய ஓலைக் குடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்ட கொல்லை உழவா்கள், பறையை முழக்கி ஒலியை எழுப்பிக் களைக் கொட்டினால் களையினைப் பறித்துப் புனத்தினைத் தூய்மை செய்தனா்.

இனக்குழுச் சமுதாய எச்சங்களைத் தாங்கிய சீறூா் மன்னா்களின் நிலப்பகுதியின் இயல்பை உரைக்கும் பாடலொன்று,

கருங்கால் வரகேயிருங் கதிா்த் திணையே

சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ

டிந்நான் கல்ல துணாவு மில்லை (புறம்.335)

என்னும் புறநானூற்று பாடலின் வழி வரகு, தினை, கொள், அவரை எனம் உணவு தானியங்களை அச்சமுதாயம் உற்பத்தி செய்து உணவு தேவையினைப் பூா்த்தி செய்ததை அறியமுடிகியது. வரகு விளையும் நிலமாய்ச் சீறூா் காட்டப்பட்டுள்ளது (புறம்.21,322). வரகு சங்க இலக்கியத்தில் முல்லை நில விளைபொருளாக காட்டப்பட்டுள்ளது. இதைப் புறநானூற்றின் சீறூா்மன்னா் பற்றிய வல்லாண் மல்லை, மூதின் முல்லைப் பாடல்கள் காட்டுகின்றன.

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்

குவளை உண்கண் குய்ப்புகை கமழத்

தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்

இனிதுஎனக் கணவன் உண்டலின்

நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்.167)

முற்றிய தயிரைக் காந்தள் மலர் போன்ற தன் விரல்களால் பிசைகிறாள். உடனே விரலைத் தன் ஆடையில் துடைத்துக் கொண்டு அதைத் துவையாமலே, புளிக்குழம்பு வைத்துத் தாளிக்கிறாள்.

ஆடு மேய்த்துப் பராமரிப்பவர்கள் அன்று பொதுவாக இடைமகன், இடையன் என்றார்கள். இவர்கள் தங்கள் ஆட்டின் பாலைக் கறந்து வந்து உணவுக்கு மாற்றாக விற்ற நிகழ்வை

பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய

பாலொடு வந்து கூழொடு பெயரும்

ஆடுடை இடைமகன் சென்னிச் (குறுந்.221)

குறுந்தொகை விவரிக்கிறது.

“வேளாண்மைக்குக் கால்நடைகளைப் பயன்படுத்தியதும், மேட்டுநிலப்பரப்பில் பேரளவு வேளாண்மை செய்ததும் முல்லைத்திணையில் நாம் ஏற்கெனவே பார்த்தபடி தந்தையாதிக்கத்தைக் கொண்டு வரும் சக்திகளாக விளங்கின. இருத்தல் என்பது இந்நிலையில் உயிர்வாழ்தல் என்னு ஆகிவிட்டது. ஊண்மையாகவே இருத்தலுக்கப் புதிய பொருளும் புதிய முக்கியத்துவமும் இப்போது ஏற்பட்டது. வேளாண்மை செய்வதற்காகக் குடியிருப்பில் தங்கியிருந்த நிலை போய் கணவனுடைய வழிகாட்டுதல்படி பெண் இப்பொழுது அங்கே தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது.” (கார்த்திகேசு சிவதம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, ப.171)

உலகளாவிய நிலையில் பார்க்கும்போது எந்த ஒரு சமூகமும் தனித்த ஒரு உணவாதார முறையை மட்டும் சார்ந்து வாழ்வதில்லை. நிலையானதொரு கிராம வாழ்வை ஏற்றுக்கொண்ட பின்னருங்கூட எண்ணற்ற சமூகங்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், உணவு சேகரித்தல் முதலான பழைய உணவாதார முறைகளை விட்டுவிடாமல் புதிய ஆதாரங்களைத் தேட முற்பட்டனர்.

பயிரிடுதல் என்னும் ஒரு உற்பத்தி புரட்சி ஏற்பட்டபோது பயிரிடுதலுடன் கால்நடைகளின் பயன்பாடும் உணரப்பட்டது. அதனால் கால்நடை வளர்ப்பு உருவானது. விவசாயத்திற்கான

முயற்சியில் புதிய தொழிற்கருவிகள் ஏற்படலாயின. தானியங்களைப் பாதுகாக்கும் அறிவும் சில எளிய முறைகளும் ஏற்பட்டன. இதனால் ஒரு நிலையான குடியிருப்பை ஏற்படுத்தி அங்கு வாழும் முறையும் உருவானது. பொருட்களின் எண்ணிக்கை பெருகப் பெருக ஓரிடத்தில் வாழ வேண்டி கட்டாயம் ஏற்பட்டது. இத்தகைய பண்பாட்டு விழுமியங்களின் துணையோடு சங்க இலக்கிய முல்லை நிலச்சமூகத்தின் பண்பாட்டில் ஒன்றான உணவு முறைகள் சேகரித்தல், உற்பத்தி செய்தல் என்னும் இருநிலைகளில் சிறப்புறுகின்றன.

**பார்வை நூல்கள்**

Adamson E.Hoebal, Man in Primltive World, Hill Book Company, New York (1949)

கணியன் பாலன்,பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும், எதிர் வெளியீடு(2016)

கார்த்திகேசு சிவதம்பி, பண்டைத் தமிழ்ச் சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி, மக்கள் வெளியீடு(2003)

பக்தவதசல பாரதி, இலக்கிய மானிடவியல், அடையாளம்(2012)

பக்தவதசல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம்(2009)

பக்தவதசல பாரதி,மானிடவியல் கோட்பாடுகள், அடையாளம் (2012)

ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும், தமிழினி பதிப்பகம்